<u>மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வேப்பந்தட்டை</u>
<u>அசல் வழக்கு எண். 55/2019</u>

**2024–ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 29–ம் நாள் திங்கள் கிழமை** வாதி தரப்பு சாட்சியாகிய PW–1 வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54 வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) **திருமதி. P.தேன்மொழி, உதவியாளர்** என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : சத்தியமூர்த்தி (எ) கணேசன் | தொழில் | : விவசாயம் |
| தகப்பனார்/கணவர் பெயர் | : ரத்தினம் | வட்டம் | :வேப்பந்தட்டை |
| கிராமம் | : தழுதாழை | சமயம் | : |
| சாதி | : | வயது | : 65/2024 |

**3,4, 5 முதல் 8 பிரதிவாகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

(i) எனக்கு எழுத படிக்க தெரியும். நான் Old SSLC படித்துள்ளேன். வழக்கு விவரங்களை நான்தான் எனது வழக்கறிஞரிடம் சொன்னேன். வழக்குரையை படித்து பார்த்தேன். வழக்குரையில் தாவா சொத்தின் கிழமேல் மற்றும் தென்வடல் அடிமனை அளவுகளை சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். தாவா சொத்து விவரத்தில் காலனி வீடு மற்றும் கூரைவீடு ஆகியவற்றை காட்டியுள்ளேனா என்றால் காட்டியுள்ளேன். அதன் நீள, அகல, அளவுகள் என்ன என்றால் தனித்தனியான தெரியவில்லை. மொத்தமாக நீளம் 12.4 மீ , அகலம் 8.6 மீ ஆகும். தாவா சொத்து எனக்கு சொந்தமானது இல்லை என்பதால் தாவா சொத்தின் அளவுகளை என்னால் சொல்லமுடியவில்லை என்றால் சரியல்ல. எனது உடன் பிறந்த சகோதரிகள் 4 பேர் சிவகாமி, பச்சையம்மாள், அரசு, மலர்கொடி ஆவார்கள். அவர்களுக்கு வழக்கு நடக்கும் விவரம் தெரியுமா என்றால் தெரியாது. அவர்களில் சிவகாமி, பச்சையம்மாள் தவிர மற்றவர்கள் உயிருடன் உள்ளனர்.

(ii) உயிருடன் உள்ளவர்களை வழக்கில் தரப்பினர்களான சேர்க்கவில்லை என்றால் சரிதான். தாவா சொத்து தாய்வழியில் கிடைத்த சொத்தாகும். அதற்குண்டான ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேனா என்றால் செய்துள்ளேன். எவ்வளவு அளவு பகுதிக்கு எனக்கு பட்டா அளிக்கப்பட்டுள்ளது என்றால் 2 ½ செண்ட் அளவிற்கு பட்டா கொடுக்கப்பட்டுள்ளது. எனது அடிமனையை ஒட்டி மேற்புறம் என்ன உள்ளது என்றால் காலிமனை உள்ளது. மேற்படி காலிமனை 4 ம் பிரதிவாதிக்கு சொந்தமானது என்றால் சரியல்ல. மேற்படி காலிமனைக்கு எனது பெயரில் பட்டா உள்ளதா என்றால் உள்ளது. தாவா சொத்திற்கு எனது பெயரில் பட்டா இல்லை என்று சொன்னால்

சரியல்ல. தாவா சொத்து தொடர்பாக 4ம்பிரதிவாதி எனக்கு எதிராக பெரம்பலூர் சார்பு நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளள விவரம் எனக்கு தெரியுமா என்றால் 2023ம் வருடம் சம்மன் சார்வு செய்யப்பட்ட பின்னிட்டு தான் தெரியவந்தது. பிரதிவாதிகள் தரப்பு கேட்டுக்கொண்டதற்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வாய்தா அளித்து ஒத்திவைக்கப்படுகிறது.